வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 19.07.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் நாளை மறுநாள் திங்கட்கிழமை தொடங்க உள்ள நிலையில், நாளை அனைத்து கட்சி கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான விரைவான தொழில்நுட்ப அடித்தளம் உருவாக்கப்பட்டு வருவதாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

போதை பழக்கம் இல்லா இந்தியாவை உறுதி செய்வதில் இளையோர் முக்கிய பங்காற்றுவதாக மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

வேளாண்மையில் நவீன தொழில்நுட்பத்தின் அவசியத்தை மத்திய கல்வித்துறை அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் வலியுறுத்தி உள்ளார்.

*மழைக்கால கூட்டத் தொடர் (8)*

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் நாளை மறுநாள் திங்கட்கிழமை தொடங்க உள்ள நிலையில், நாளை அனைத்து கட்சி

கூட்டத்திற்கு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது. புதுடெல்லியில் அடுத்த மாதம் 21 ஆம் தேதி வரை மழைக்கால கூட்டத் தொடரை சுமுகமாக நடத்த அரசியல் கட்சியினரின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது. இதனிடையே, இக் கூட்டத் தொடரில் கடைபிடிக்க வேண்டிய நிலைப்பாடு குறித்து அமைச்சர்கள் திரு ராஜ்நாத் சிங், திரு அமித் ஷா, திரு ஜே பி நட்டா, திரு கிரண் ரிஜிஜூ உள்ளிட்டோர் முக்கிய ஆலோசனை மேற்கொண்டனர்.

*மங்கல் பாண்டே* 1 (3)

சுதந்திர போராட்ட வீரர் மங்கல் பாண்டே-வின் பிறந்த நாள் இன்று கொண்டாடப்பட்டது. இதனையொட்டி பல்வேறு தலைவர்கள் அவருக்கு புகழாரம் சூட்டியுள்ளனர். இதுகுறித்த ஒரு செய்தித் தொகுப்பு…..

**வாய்ஸ்**

*மங்கல் பாண்டே* 2 (15)

**வாய்ஸ்**

மங்கல் பாண்டேவிற்கு அஞ்சலி செலுத்திய பிரதமர் திரு நரேந்திர மோடி, பிரிட்டிஷ் ஆட்சிக்கு சவால் விடுத்த நாட்டின் முன்னணி போர் வீரர் மங்கல் பாண்டே என்று பிரதமர் சமூக ஊடகப் பதிவில் பாராட்டினார்.

மங்கல் பாண்டே வின் துணிச்சல் மற்றும் வீரத்தின் கதை நாட்டு மக்களுக்கு தொடர்ந்து உத்வேகத்தை அளிக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

மங்கல் பாண்டேவின் தேச பக்திக்கான உத்வேகம், கிளர்ச்சியின் தீ பிழம்புகளை பற்ற வைப்பதில் முக்கிய பங்காற்றியதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார். தனது வீரத்தின் தீ பொறியால் 1857 எழுச்சியை ஒரு பெரிய சுடராக மாற்றினார் என்றும், பிரிட்டிஷ் ஆட்சியின் அடித்தளத்தையே அசைத்தார் என்றும் திரு அமித் ஷா பதிவிட்டுள்ளார். மேலும், மங்கல் பாண்டேவின் தலைமையின் கீழ், பராக்பூர் கண்டோன்மெண்ட் சுதந்திர இயக்கத்தின் மையமாக மாறியதாகவும், இதனால் நாடு முழுவதும் சுதந்திர அலை வீசியதாகவும் பதிவிட்டுள்ளார். நாட்டின் ஒவ்வொரு இளைஞரும் தாய் நாட்டிற்கான அர்ப்பணிப்பிற்காக சிறந்த சுதந்திர போராட்ட வீரர் மங்கல் பாண்டேவின்

*மங்கல் பாண்டே* 3 (10)

வாழ்க்கையில் இருந்து உத்வேகம் பெற வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மத்திய அமைச்சர் திரு ஜே பி நட்டா பாண்டேவின் தியாகத்திற்கு தலைவணங்குவதாக சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார். அவரது

மரபு எதிர்கால சந்ததியினரை தொடர்ந்து ஊக்குவிக்கும் என்று பதிவிட்டுள்ளார்.

பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் மங்கல் பாண்டேவிற்கு அஞ்சலி செலுத்தி, தேசிய உணர்வை எழுப்புவதில் அவரின் முக்கிய பங்கை பாராட்டினார். மேலும், அவரது தியாகமும், அர்ப்பணிப்பும் இந்தியாவின் வருங்கால தலைமுறையினருக்கு என்றென்றும் ஊக்கம் அளிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

*மன் கீ பாத்* (8)

பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களிடையே, தனது எண்ணங்களை பகிர்ந்து கொள்ளும் 124 ஆவது மன் கீ பாத் எனும் மனதின் குரல் நிகழ்ச்சி வரும் 27 ஆம் தேதி காலை 11 மணிக்கு ஆகாஷ்வாணி மற்றும் தூர்தர்ஷனின் அனைத்து அலைவரிசைகளிலும் ஒலிபரப்பாக உள்ளது. இந்நிகழ்ச்சியில் இடம் பெற வேண்டிய கருத்துக்களை, பொதுமக்கள் நமோ செயலி, மை கவ் இணையதளம், 1800-11-7800 என்ற கட்டணமில்லா தொலைபேசி வாயிலாகவோ அல்லது 1922 என்ற எண்ணில் குறுஞ்செய்தியாகவோ வரும் 25 ஆம் தேதிக்குள் தெரிவிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான விரைவான தொழில்நுட்ப அடித்தளம் உருவாக்கப்பட்டு வருவதாக மத்திய ரயில்வே அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். ஐதராபாத் இந்திய தொழில்நுட்ப கல்வி கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் இன்று கலந்து கொண்டு உரையாற்றிய அவர், உலக தரத்திலான தொழில்நுட்பத்தை கருவிகளையும் வடிவமைக்க மாணவர்கள் முன்வர வேண்டும் என்றார். செமி கண்டெக்டர் துறையின் முதலாவது தகடு இந்தாண்டு வெளியிடப்படும் என தெரிவித்த அவர், நாட்டின் 6 முக்கிய இடங்களில் இதற்கான உற்பத்தி மைய கட்டுமான பணிகள் நடைபெற்று வருவதாக கூறினார். ரயில்வே துறையில் சீர்திருத்தங்களை சுட்டிக்காட்டிய அமைச்சர், நாட்டின் புல்லட் ரயில் சேவை இரண்டு ஆண்டுகளில் தொடங்கப்படும் என்றார். இதற்கான தயாரிப்பு பணிகள் சென்னையில் நடைபெற்று வருவதாக தெரிவித்த அவர், செயற்கை நுண்ணறிவு திட்டத்திற்கான பயிற்சிகள் நாட்டில் வழங்கப்பட்டு வருவதாக கூறினார். 2047 ஆண்டு வாக்கில் உலகளாவிய இரண்டு பொருளாதார சக்திகளில் ஒன்றாக இந்தியா உருவெடுக்கும் என நம்பிக்கை தெரிவித்தார். தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் தலைமையில் வளர்ச்சி அடைந்த இந்தியாவில் இளையோரின் ஆளுமையை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார். உத்தரபிரதேச மாநிலம் வாரணாசியில் போதை வழக்கத்திற்கு எதிரான இளையோர் ஆன்மீக உச்சி மாநாட்டை இன்று தொடக்கி வைத்து பேசிய அவர், போதை பழக்கம் இல்லா இந்தியாவை உறுதி செய்வதில் இளையோர் முக்கிய பங்காற்றுவதாக கூறினார். மத்திய அமைச்சர்கள் திரு கஜேந்திர சிங் ஷெகாவத், டாக்டர் வீரேந்திர குமார் ஆகியோர் பங்கேற்கும் இந்த 2 நாள் மாநாட்டில், போதையில்லா இந்தியாவிற்கான விரிவான திட்ட செயலாக்க கொள்கை வெளியிடப்படும். இதனிடையே, போதை பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்குவதில் இளையோர் உச்சி மாநாடு எவ்வாறு முக்கியம் என்பதை எடுத்துக்காட்டும் கட்டுரையை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பகிர்ந்துள்ளார். மேலும், போதை பொருள் இல்லாத இந்தியாவை உருவாக்க இந்த உச்சிமாநாடு எவ்வாறு உதவுகிறது என்பதை சுகாதார அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா கட்டுரையில் விரிவாக கூறியுள்ளதாக பிரதமர் சமூக ஊடகப் பதிவில் தெரிவித்துள்ளார்.

*தர்மேந்திர பிரதான்* (10)

வேளாண்மையில் நவீன தொழில்நுட்பத்தின் அவசியத்தை மத்திய கல்வித்துறை அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் வலியுறுத்தி உள்ளார். கேரள மாநிலம் பாலக்காடு இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் 7 வது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றிய அவர், போக்குவரத்து கட்டுமானம், மருத்துவ வசதிகள் உள்ளிட்ட பல்வேறு கட்டமைப்பு பிரிவுகளில் தொழில்நுட்ப தற்சார்பின் முக்கியத்துவத்தை சுட்டிக் காட்டினார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையின் கீழ், சர்வதேச அளவில் இந்தியாவின் மின்னணு பொது கட்டமைப்பு தொடர்ந்து வளர்ச்சி கண்டு வருவதாக பெருமிதம் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், 328 மாணவர்களுக்கு அமைச்சர் பட்டங்களை வழங்கினார்.

*ஸ்வச் சர்வேக்ஷன்* (17)

**2024-25ஆம் ஆண்டு தூய்மைக் கணக்கெடுப்பு** அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட, 9 ஆம் ஆண்டு **ஸ்வச் சர்வேக்ஷன் விருதுகளை,** குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கடந்த வியாழக்கிழமை வழங்கினார். இதில், **புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் முன்னேற்றநிலைத் தூய** நகரமாக, உழவர்கரை நகராட்சி, தேர்ந்தெடுக்கப்பட்டு விருது வழங்கப்பட்டது. **3 லட்சம் முதல் 10 லட்சம் மக்கள் தொகை** கொண்ட

நகரங்கள் பிரிவில் உழவர்கரை நகராட்சி, 7 ஆயிரத்து 932 புள்ளிகளுடன், 55ஆம் இடம் பெற்றுள்ளது. உழவர்கரை நகராட்சிப் பகுதியில், குப்பை கிடங்குகள் 100 சதவிகிதம் மீட்கப்பட்டு, குடியிருப்புப் பகுதிகள், மற்றும், சந்தைப் பகுதிகளில், தலா 95 சதவிகித தூய்மை எட்டப் பட்டுள்ளது. வீடு வீடாகச் சென்று, குப்பை சேகரிக்கும் பணிகள், 60 சதவிகிதம் விஸ்தரிக்கப் பட்டுள்ளன. நீர் நிலைகளில், 54 சதவிகித அளவிற்கும், பொதுக் கழிவறைகளில், 40 சதவிகித அளவிற்கும், தூய்மை எட்டப் பட்டுள்ளது. புதுச்சேரியில், 30 சதவிகித குப்பைகளை தரம் பிரித்து அகற்றப் படுவதும், 31 சதவிகித குப்பைகள், மறு சுழற்சி, மற்றும் மறு பயன்பாட்டிற்கு அனுப்பப் படுவதும் குறிப்பிடத் தக்கது. இதுகுறித்து உழவர்கரை நகராட்சி ஆணையர் சுரேஷ்ராஜ் கூறுகையில்,...

**வாய்ஸ்**

*காரைக்கால்* (8)

காரைக்கால் திருப்பட்டினம் அரசு மகளிர் தொழிற்பயிற்சி நிலையத்தில் Computer operator and programming Assistant, Sewing Tecnology, Data Entry Operator, Cosmetology ஆகிய ஒரு வருட பயிற்சி பிரிவுகளில் காலியாக உள்ள இடங்களுக்கான உடனடி சேர்க்கை வரும் 23 ஆம் தேதி முதல் நடைபெற உள்ளது. இப்பயிற்சியில் சேர விரும்பும் 8 மற்றும் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவிகள் தகுந்த

சான்றிதழ்களுடன் பயிற்சி நிலைய முதல்வரை அணுகுமாறு கேட்டுக் கொள்ளப்படுவதாக அரசு மகளிர் தொழிற்பயிற்சி நிலையம் அறிவித்துள்ளது.

ஆன் லைன் சூதாட்டம் (6)

ஆன் லைன் சூதாட்ட செயலி வழக்குகள் தொடர்பாக கூகுள் மற்றும் மெட்டா தொழில்நுட்ப நிறுவனங்களுக்கு அமலாக்க இயக்குநகரகம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது. இந்த இரு நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் திங்கட்கிழமை, அதன் டெல்லி தலைமை செயலகத்தில் ஆஜராகுமாறு சம்மன் அனுப்பி உள்ளது. இந்த ஆன் லைன் சூதாட்ட செயலிகளை விளம்பரப் படுத்துவதில் டிஜிட்டல் தளங்களின் பங்கை நிறுவனம் ஆராய்ந்து வருகிறது.

விளையாட்டு (8)

வரும் ஜூலை 21 முதல், ஆகஸ்ட் 29 வரை பெங்களூரில் நடைபெற இருக்கும் சீனியர் மகளிர் தேசிய பயிற்சி முகாமிற்கான 40 பேர் கொண்ட குழுவை ஹாக்கி இண்டியா இன்று அறிவித்துள்ளது. செப்டம்பர் 5 ஆம் தேதி சீனாவின் ஹாங்சோ-வில் தொடங்க உள்ள மகளிர் ஆசிய கோப்பைக்கு இந்திய மகளிர் ஹாக்கி அணி தயாராகி வருவதால் இந்த முகாம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. இப்போட்டியில்,

சாம்பியன் பட்டம் பெறுபவர் மட்டுமே மகளிர் உலக கோப்பை போட்டியில் பங்கேற்க நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுவார்.

*வானிலை* (6)

தென்னிந்திய பகுதிகளின் மேல் நிலவும் வளி மண்டல மேலடுக்கு சுழற்சி மற்றும் மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக தமிழகத்தின் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி – காரைக்கால் ஆகிய பகுதிகளிலும், இன்று முதல் வரும் 25 ஆம் தேதி வரை இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல், மிதமான மழை பெய்யக் கூடும் என்று இந்திய வானிலை ஆய்வு கழகம் தெரிவித்துள்ளது.